**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை : திருமதி **V.** பார்கவி**.,B.A.,B.L.,L.L.M.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி

-------

2022-ம் ஆண்டு மார்ச் மாதம் 18-ம் நாள் வெள்ளிக்கிழமை
திருவள்ளுவராண்டு 2053, பிலவ வருடம் பங்குனி மாதம் 04-ஆம்நாள்

------

**அசல் வழக்கு எண்.158/2016-ல் இடைமனு எண்.01/2021ல் இடைமனு எண்.3/2021**

கோபாலகிருஷ்ணன் ..மனுதாரர்/மனுதாரர்/ வாதி

..எதிர்...

கணேசன் ..எதிர்மனுதாரர்/எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 10.03.2022 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர்.ஆத்மநாதன் அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு E. செல்வராஜ் அவர்களும் ஆஜராகியும் இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து இதுநாள்வரையில் என்னுடைய பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

மனுதாரர்/ வாதி தாக்கல் செய்துள்ள இடைமனு எண்.1/2021-யை Not press செய்துகொள்வதற்கு அனுமதிக்கக்கோரி மனுதாரரால் இம்மனு உ.வி.மு.ச. பிரிவு 151 ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுவின் சுருக்கம்**

மனுதாரர் அசல் வழக்கின் வாதி. அசல் வழக்கை மனுதாரர்/ வாதி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்து இடைமனு எண். 737/2016-ல் இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவும் பெற்றிருந்தார். மனுதாரருக்கு நீதிமன்றம் வழங்கிய இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவு அமுலில் இருந்தபோது எதிர்மனுதாரர்/பிரதிவாதி கடந்த 23.02.2017 அன்று மனுதாரரின் இடத்தில் அத்துமீறி ஆக்கிரமித்து கிருஷ்ணா வணிக வளாகம் என்ற கட்டிடம் கட்டிவிட்டார். மனுதாரர் எதிர்மனுதாரர் மீது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 39, விதி 2 (A)-ன் கீழ் மனுத்தாக்கல் செய்து அம்மனு தள்ளுபடியாகிவிட்டது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் மனுதாரர் தாக்கல் செய்துள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரிய வழக்கை வசப்பரிகாரம்

கோரி பரிகாரத்தை மாற்றி நடத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அவ்வாறு வசப்பரிகாரம் கோரி வழக்குப்பரிகாரத்தை மாற்றும்போது தாவாச்சொத்தின் சந்தை மதிப்பானது மாவட்ட உரிமையியல் நீதிமன்ற வரம்பை விட அதிகமாக இருப்பதாக இருப்பதால் வழக்கை வாபஸ் பெற்றுக்கொள்வதற்காக மனுதாரர் இடைமனு எண். 1/2021 தாக்கல் செய்து அந்த மனுவானது 15.12.2021-ம் தேதியன்று உத்தரவிற்காக போடப்பட்டுள்ளது. மனுதாரர் தாவா சொத்தின் மதிப்பை தவறுதலாக மதிப்பீடு செய்துவிட்டார். தாவா சொத்தின் மதிப்பு இந்நீதிமன்ற எல்லைக்குள்தான் இருக்கிறது. அசல் வழக்கை வசப்பரிகாரம் மற்றும் செயல் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இந்த வழக்கிலேயே வழக்குரையை திருத்தம் செய்ய மனுதாரருக்கு சட்ட ஆலோசனை கிடைத்துள்ளது. எனவே மனுதாரர்/ வாதி தாக்கல் செய்துள்ள இடைமனு எண்.1/2021-யை Not press செய்துகொள்ள அனுமதித்து உத்தரவிடக்கோரி மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதிக்க வேண்டும்.

3. <u>எதிர்மனுதாரர் எதிருரையின் சுருக்கம்</u>

மனு சட்டப்படியும், நியாயப்படியும் சரியல்ல. மனுவை எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்ய வேண்டும். மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இடைமனு எண். 1/2021-ல் உ.வி.மு.ச.கட்டளை 39, விதி 2(எ)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனு சாதகமாக உத்தரவாகவில்லை என்பதால் அதன் அடிப்படையில் வழக்கை வசப்பரிகாரத்திற்காக தாக்கல் செய்யவேண்டுமென்றும் அதன்காரணமாக அசல் வழக்கை வாபஸ் பெற்றுக்கொள்வதாக இடைமனு தாக்கல் செய்தபிறகு எதிர்மனுதாரர் அந்த மனுவில் ஆட்சேபணை இல்லை என்று தெரிவித்தபோது தற்போது இடைமனு எண்.1/2021 உத்தரவிற்காக போடப்பட்டிருக்கும் போது இடைமனு எண்.1/2021-யை Not press செய்ய வேண்டுமென்ற மனுதாரரின் இம்மனுவின் கோரிக்கை சாட்சிய சட்டம் பிரிவு 115-ன்படி முரண்தடை (Estoble) பட்டுள்ளது. எனவே இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

.4. <u>இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை</u>

மனுதாரர்/மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

5. இம்மனுவில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

6. <u>தீர்வு</u>

மனுதாரர் தரப்பில் அசல் வழக்கை எதிர்மனுதாரர்/ பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளதாகவும், மனுதாரர் தாக்கல் செய்துள்ள

இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரிய இடைமனு எண்.737/2016-ல் இடைக்கால உறுத்துக்கட்டளை பெற்றிருந்ததாகவும், இந்த இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவு அமலில் இருந்தபோது எதிர்மனுதாரர்/பிரதிவாதி 23.02.2017 அன்று தாவா சொத்தில் அத்துமீறி ஆக்கிரமித்து வணிக வளாகம் கட்டி விட்டார் என்றும், அவ்வாறு எதிர்மனுதாரர் ஆக்கிரமித்துள்ள சொத்தினை வசம் பெறுவதற்காக சுவாதீனமீட்பு பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்ய வேண்டியுள்ளது என்றும், அவ்வாறு சுவாதீனமீட்பு பரிகாரம் கோரும்போது தாவாச்சொத்தின் சந்தை மதிப்பு பொருமானம் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அதிகார வரம்பைவிட மதிப்பு வரும் என்பதால் இந்த அசல் வழக்கை வாபஸ் பெற்றுக்கொள்ள அனுமதிக்கக்கோரி மனுதாரர் இடைமனு எண்.1/2021 தாக்கல் செய்து அம்மனு உத்தரவிற்காக வாய்தா போடப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் தாவா சொத்தின் மதிப்பை தவறாக கணக்கிட்டு அந்த மனுவைத்தாக்கல் செய்துள்ளதாகவும், வசப்பரிகாரத்திற்கானபொருமானம் கணக்கிடும்போது இந்த வழக்கை விசாரணைசெய்ய இந்நீதிமன்றத்திற்கு அதிகார வரம்பு உள்ளது என்றும், எனவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள இடைமனு எண். 1/2021-யை Not press செய்து கொள்ள அனுமதிக்க வேண்டுமென்ற இம்மனுவை அனுமதிக்க வேண்டும் என்றும் வாதம் செய்யப்பட்டது. எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இடைமனு எண். 1/2021-ல் உ.வி.மு.ச.கட்டளை 39, விதி 2(எ)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனு சாதகமாக உத்தரவாகவில்லை என்பதால் அதன் அடிப்படையில் வழக்கை வசப்பரிகாரத்திற்காக தாக்கல் செய்யவேண்டுமென்றும் அதன்காரணமாக அசல் வழக்கை வாபஸ் பெற்றுக்கொள்வதாக இடைமனு தாக்கல் செய்தபிறகு எதிர்மனுதாரர் அந்த மனுவில் ஆட்சேபணை இல்லை என்று தெரிவித்தபோது தற்போது இடைமனு எண்.1/2021 உத்தரவிற்காக போடப்பட்டிருக்கும் போது இடைமனு எண்.1/2021-யை மறுதிறப்பு செய்ய வேண்டுமென்றும், அந்த இடை மனுவை Not press செய்ய வேண்டுமென்ற மனுதாரரின் இம்மனுவின் கோரிக்கை சாட்சிய சட்டம் பிரிவு 115-ன்படி முரண்தடை (Estoble) பட்டுள்ளது என்றும், எனவே இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதம் செய்யப்பட்டது.

8. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்கு கோப்புகள் பரிசீலிக்கப்பட்டன. வழக்கின் கோப்புக்களை பரிசீலனை செய்தபோது அசல் வழக்கை மனுதாரர்/வாதி தாவாச்சொத்தைப்பொறுத்த நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி எதிர்மனுதாரர்/ பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. மனுதாரர் இம்மனுவில் அசல் வழக்கில் இடைமனு எண். 737/ 2016-ல் இடைக்கால உறுத்துக்கட்டளை இந்நீதிமன்றம் பிறப்பித்து நிலுவையில் இருந்தபோது

எதிர்மனுதாரர்/பிரதிவாதி தாவாச்சொத்தில் 23.02.2017 அன்று ஆக்கிரமித்துவிட்டார் என்றும், அதனைப்பொறுத்து வசப்பரிகாரம் கோர வேண்டியுள்ளது என்றும், வசப்பரிகாரம் கோரும்பொழுது தாவாச்சொத்தின் சந்தை மதிப்பானது மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அதிகார வரம்பைவிட அதிகமாக வரும் என்பதால் இந்த அசல் வழக்கை உரிய அதிகார வரம்பு உள்ள நீதிமன்றத்தில் வசப்பரிகாரம் கோரி தாக்கல் செய்வதற்காக இந்த வழக்கை வாபஸ் பெற்றுக்கொள்ள அனுமதிக்க வேண்டுமென்று கோரி இடைமனு எண்.1/2021 தாக்கல் செய்துள்ள அம்மனு உத்தரவிற்காக வாய்தா போடப்பட்டுள்ள மனுதாரர்/வாதி தாவா சொத்தின் மதிப்பை தவறாக கணக்கிட்டு விட்டதாகவும், வசப்பரிகாரம் கோருவதற்கு இந்நீதிமன்றத்திற்கு அதிகார வரம்பு உள்ளது என்றும், எனவே மனுதாரர் வழக்கை வாபஸ் பெற்றுக்கொள்ள அனுமதிக்கக்கோரி தாக்கல் செய்துள்ள இடைமனு எண். 1/2021-யை Not press செய்து கொள்ள மனுதாரருக்கு உரிமையுண்டு. எனவே இடைமனு எண்.1/2021-யை Not press செய்ய வேண்டுமென்ற மனுதாரரின் இம்மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு எவ்விதமான பாதிப்பும் ஏற்படப்போவதில்லை. மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள மனுவை வாபஸ்பெறுவதற்காக மனுதாரருக்கு உரிமையுண்டு. எனவே மனுதாரர்/ வாதி தாக்கல் செய்துள்ள இடைமனு எண்.1/2021-யை Not press செய்துகொள்ள அனுமதித்து உத்தரவிட வேண்டுமென்ற மனுதாரரின் இம்மனுவின் கோரிக்கையானது ஏற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ளதால் அதன்பொருட்டு மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கது என்றும், மனுவின் தன்மை கருதி மனுவிற்கான செலவுத்தொகையை தரப்பினர்கள் அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

முடிவில் இம்மனுவானது செலவுத்தொகையின்றி அனுமதிக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2021ம் ஆண்டு டிசம்பர் 18-ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி.

<u>பின் இணைப்பு</u>

| | |
|---|---|
| <u>மனுதாரா் தரப்பு சாட்சிகள்</u> | - இல்லை- |
| <u>எதிா்மனுதாரா் தரப்பு சாட்சிகள்</u> | -இல்லை- |
| <u>மனுதாரா் தரப்பு சான்றாணங்கள்</u> | - இல்லை- |
| <u>எதிா்மனுதாரா் தரப்பு சான்றாவணங்கள்</u> | - இல்லை- |

மா.உ.நீ.

நேரிய/வரைவு உத்தரவு
அசல் வழக்கு எண். 158/2016-ல்
இடைமனு எண். 01/2021-ல்
இடைமனு எண். 03/2021
நாள் - 18.03.2022.